**செய்தி வெளியீடு எண்: 865** **நாள்: 27.11.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

''கஜா'' புயல் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கடலூர், திண்டுக்கல், சிவகங்கை, கரூர், திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட மாவட்டங்களில் வரலாறு காணாத பாதிப்புகளை ஏற்படுத்தியது. வாழ்வாதாரங்களை இழந்த மக்களுக்கு உதவிடவும், நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடைகள் வழங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.11.2018 அன்று பத்திரிகைகளின் வாயிலாக நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் வேண்டுகோளினை ஏற்று, தமிழ்நாட்டில் ''கஜா'' புயலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்.

- 24.11.2018 அன்று தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தின் சார்பாக தலைவர் திரு.A.K.P.சின்ராஜ், செயலாளர் திரு.K.சுந்தர்ராஜ், பொருளாளர் திரு.P.இளங்கோ ஆகியோர் 40 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- 26.11.2018 அன்று கோயம்புத்தூர், லஷ்மி மெஷின் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.சஞ்சய் ஜெயவர்த்தனவேலு அவர்கள் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.
- சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் மற்றும் பணியாளர்களின் சார்பில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.எஸ்.என்.பாண்டே அவர்கள் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ரெப்கோ வங்கி மற்றும் ரெப்கோ நுண்கடன் வங்கி அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் சார்பில், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) / ரெப்கோ வங்கியின் தலைவருமான டாக்டர் பி. செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்கள் 30 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- சென்னை, மாலை முரசு நாளிதழின் நிர்வாக இயக்குநர் திரு. இரா.கண்ணன் ஆதித்தன் அவர்கள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- சென்னை, கொளத்தூர், எவர்வின் அறக்கட்டளை, ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் ஆகியோரின் பங்களிப்பாக, எவர்வின் கல்வி நிறுவனம் மற்றும்

அறக்கட்டளையின் முதன்மை செயல் அலுவலர் திருமதி.பி.மகேஸ்வரி அவர்கள் ரூபாய் 31 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

- ❖ வி.ஜி.பி. குழுமத்தின் தலைவர் முனைவர்.வி.ஜி.சந்தோஷம் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ திருவாரூர், ஸ்ரீ நாராயணி நிதி லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.எஸ்.கார்த்திகேயன் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ உதவும் கரங்கள் நிறுவனச் செயலாளர் திரு.வித்யாகர் அவர்கள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர் திரு.யு.சுதிர் லோதா அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ சாய்ராம் கல்விக் குழுமங்களின் சார்பில், அதன் தலைவர் மற்றும் முதன்மை செயல் அதிகாரி திரு.சாய்பிரகாஷ் லியோ முத்து அவர்கள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ சேலம் புறநகர் மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், சேலம் புறநகர் மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அம்மா பேரவையின் சார்பாகவும், சேலம் புறநகர் மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ அ.இ.அ.தி.மு.க. இலக்கிய அணி சார்பில், கழக இலக்கிய அணி செயலாளர் திருமதி. பா.வளர்மதி அவர்கள் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ அ.இ.அ.தி.மு.க. கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர். C.N.ராஜதுரை அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ Kraft Heinz India (P) Ltd., கிளை மேலாளர் திரு.சந்தோஷ்குமார் சிங் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ ரியல் எஸ்டேட் ஓனர்ஸ் அசோசியேஷன் ஆப் ஈரோடு சார்பில் அதன் தலைவர் திரு.வி.சதாசிவம் மற்றும் நிர்வாகிகள் 20 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ Martin Charitable Trust சார்பாக டாக்டர் லீமா ரோஸ் மார்ட்டின், டாக்டர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் மற்றும் திருமதி சிந்து சார்லஸ் ஆகியோர் 5 கோடி ரூபாய்க்கான வங்கி வரைவோலை.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களிடம் இன்று (27.11.2018) நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்.

- ❖ நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராகேஷ் குமார் அவர்கள் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்

நிறுவனம் மற்றும் பணியாளர்களின் சார்பில் 6 கோடியே 79 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

❖ சன் டிவி நெட்வொர்க் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திரு.சண்முகம் மற்றும் தலைமை நிதி அலுவலர் திரு. நாராயணன் ஆகியோர் சன் டிவி குழுமத்தின் சார்பில் 2 கோடி ரூபாய்க்கான காசோலை.

❖ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளரும், மாண்புமிகு துணை முதலமைச்சருமான திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.

❖ மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சரும், மாநில புரட்சித் தலைவி அம்மா பேரவை செயலாளருமான திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்கள், புரட்சித் தலைவி அம்மா பேரவை சார்பில் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, மதுரை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மதுரை புறநகர் மாவட்ட கழக நிர்வாகிகள் சார்பில் 17 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை.

❖ நாகா நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு.சௌந்தர் கண்ணன், தலைமை செயல் அலுவலர் திருமதி மோனா கண்ணன் மற்றும் வணிகத் தலைவர் திரு.விக்னேஷ் சுகுமார் ஆகியோர் 11 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

❖ அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் மாநில துணைச் செயலாளர் திரு.அண்ணாநகர் கே. பாண்டுரங்கன் அவர்கள் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

❖ திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு.கே. ராஜன் அவர்கள் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

❖ முன்னாள் அமைச்சர் முனைவர் வைகைச் செல்வன் அவர்கள் தனது ஐந்து மாத ஓய்வூதியத் தொகையான 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

**இன்று மட்டும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், 'கஜா' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக 10 கோடியே 68 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அளிக்கப்பட்டுள்ளது.**

அத்துடன், பொதுமக்களும் நேரடியாகவும், ஆன்–லைன் மூலமாகவும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கிய நன்கொடைகளை சேர்த்து, இதுவரை வழங்கப்பட்ட தொகை 33 கோடியே 66 லட்சத்து 80 ஆயிரத்து 583 ரூபாயாகும்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 27.11.2018**